[1995 நவம்பர் 8

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 49, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், இருக்கையில் இல்லை.

வினா எண் 50, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

50—

வேளாண் இடுபொருள்கள் விவசாயிகளுக்கு வழங்குதல்

*38163–திரு. என். ஆர். **சிவபதி:***

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை அலுவலகம் மூலம் இடுபொருள், விதை, உரம், விவசாயக் கருவிகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு தக்க தருணத்தில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள 880 விரிவாக்க மையங்கள் மூலம் தேசிய திட்டங்கள் மற்றும் சிறப்புத் திட்டங்களுக்கு தேவையான விதைகள், விவசாயக் கருவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளுக்கேற்ப கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் உரங்கள் தங்குதடையில்லாமல் கிடைக்கின்றன.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவு வேளாண்மை அலுவலகம் மூலம் அனைத்துப் பொருட்களும் கிடைப்பதாகச் சொன்னார்கள். நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், எல்லா நேரத்திலும் இடுபொருள் இருப்பு அதிகமாக இருப்பதில்லை. ஆகவே, அந்தந்தப் பகுதிகளின்

1995 நவம்பர் 8]

தேவைக்கேற்பவும், ஒருசில காலங்களில் வெள்ளத்தாலும் மற்றும் பருவ சூழ்நிலைகள் மாறுகின்றபோது ஏற்படுகின்ற நோய் மற்றும் சேதத்தைத் தடுக்கின்ற விதத்தில் விவசாயத்திற்கு ஏற்றவாறு அந்தந்தப் பகுதிகளின் விவசாயிகளின் நலன் கருதியும் தேவையான உரம் மற்றும் மருந்து ஆகியவைகள் கிடைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் காலத்திலே தொடர்ந்து *4* ஆண்டுகளாக வேளாண்மையிலே அளப்பரிய உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் நல்ல பருவ மழை பெய்து வருகின்றது. இந்தத் தருணத்தில் நெற் பயிருக்குத் தேவையான யூரியா தட்டுப்பாடு உள்ளது. கடைகளில் சிலர் அதிக விலைக்கு விற்கின்றார்கள். இருப்பு வைத்துக்கொண்டு இல்லை என்கிறார்கள். இதனைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரசாயன உரங்களைப் பொறுத்தமட்டிலே மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்கிறது. அந்த ஒதுக்கீடுகளைப் பெற்று மாநிலத்தில் உள்ள விவசாயிகளுக்குத் தேவைக்கேற்ப உரங்கள் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணிக்கக்கூடிய பொறுப்பு மட்டுமே மாநிலத்தின் கையிலே இருக்கிறது. கடந்த அக்டோபர் மாதம் தமிழகத்திற்கு மட்டும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது *1,30,000* டன். ஆனால், அக்டோபர் மாதத்திலே விநியோகம் செய்யப்பட்ட யூரியா ஏறத்தாழ *80,000* டன். மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உரத்திலே *50,000* டன் யூரியா கிடைக்கவில்லை. எனவே, இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு, நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய வேளாண்மைத் துறை செயலாளரை நேற்றைக்கு முந்தின நாள் டெல்லிக்கு அனுப்பினார். அவர் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி உடனடியாக *1,35,000* டன் யூரியாவை பெற்று

வந்திருக்கிறார்கள். எனவே, தமிழகத்திலே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செயயப்படுகின்ற யூரியா, சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகத்தின் வாயிலாக இறக்கப்படுகின்ற யூரியா முழுவதும் தமிழகத்திற்குக் கிடைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய தட்டுப்பாடு மிக விரைவிலே நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைக் காரணமாகக் கொண்டு எந்தத் தனியார் விற்பனையாளர்கள் அதிக விலைக்கு விற்றாலும் அவர்கள்மீது அத்தியாவசிய பொருள்கள் பதுக்கல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை அலுவலகம் மூலமாக விவசாயிகளுக்கு என்னென்ன பொருள்கள் மானியமாகவும், இலவசமாகவும் எவ்வளவு வழங்கப்படுகிறது, யார் யாருக்கு என்னென்ன பொருள்கள் வழங்கப்படுகிறது என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–45*

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை இங்கே வைத்து வாசிக்கின்றபோதும் அதைப்பற்றிய விவாதங்கள் ஏற்படுகின்றபோதும், அதுபற்றிய கையேடுகள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 51, திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. சஞ்சய் ராமசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

51—

தனியார் பள்ளிகளுக்கு உதவி

33465*–திரு வி. ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--